**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**<u>ST.C. No. 1269-2022</u>**

Name : ரவிராஜன் Date : 16.09.2025

Father Name : முத்துலிங்கம் :

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1. எனது திருமணம் இந்து மத சம்பிரதாயப்படி கோவிலில் நடைபெற்றது என்றால் சரிதான். விருந்து உபசரிப்பு வைத்திஸ்வரன் கோவில் மகாலெட்சுமி திருமண மஹாலில் நடந்தது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எமாசா 2ல் உள்ள புகார்தாரரின் பெயர் என்ன என்றால் சண்முகம் ஆகும். அவர் வழக்கறிஞர் ஆவார். நான் எதிரியின் மீது எமாசா 2 ஆன புகாரை கொடுத்ததாக பொய் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காசோலை மோசடி தொடர்பான வழக்கு என்றால் சரிதான்.

2. புகார்தாரரும் அவரது ஆட்களும் என்னை தாக்கியதாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில் அது தொடர்பாக நான் தனி புகாரோ அறிவிப்போ ஏதேனும் புகார்தாரருக்கு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது வளர்ப்பு தாயான புகார்தாரரின் சகோதரி விஜயலெட்சுமி அவர்கள் கேட்டுக்கொண்டதால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. புகார்தாரரிடம் நான் எனது திருமணத்திற்காக கொடுத்ததாக சொல்லப்படும் ரூ.10 லட்சத்திற்கு என்னிடம் ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆதாரத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். என்னிடம் சாட்சியம் உள்ளது.

3. நான் எனது முதல் விசாரணையில் எனது அலுவலகத்திற்கு எடுத்து செல்லும் பையில் நான் கையெழுத்து போட்டு வைத்திருந்த 5 காசோலைகள், பொருட்கள், பணம் மற்றும் சிசிடிவி யை எடுத்து சென்றதாக

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புகார்தாரர் செய்த மேற்படி செயல்கள் தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் விஜயலெட்சுமி கேட்டுக்கொண்டதால் புகார் கொடுக்கவில்லை.

4. புகார்தாரரிடம் நான் வாங்கிய கடனை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காக பொய்யான சங்கதிகளை ஜோடித்து கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் ரூ. 10 லட்சம் பணம் கொடுக்கவில்லை என்றாலும், புகார்தாரர் எனது திருமணத்திற்கு தலைமை ஏற்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் புகார்தாரரிடம் வாங்கிய கடனுக்காக கொடுத்த காசோலையை தான் புகார்தாரர் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.